கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாமக்கல்.
முன்னிலை திருமதி M.பிரவீணா, M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, நாமக்கல்

**2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ம் நாள் புதன்கிழமை**

I.A.No.3/2021

in
O.S.196/2022

1. பங்காருவேலு
2. அமுதா
3. ராஜேஸ்வரி . . . மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

பழனிசாமி . . . எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 19.01.2024 ம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சின்னுசாமி, B.Sc., B.L. அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.C.பிரபாகரன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்கள் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை தாவாவில் ஏற்றுக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 9 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார்.

**2.மனுவின் சுருக்கம்**

1ம்மனுதாரர் அசல் வழக்கில் 1ம்பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் பேரில் தாவா சொத்து பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா செய்துள்ளதாகவும், அசல் வழக்கில் வாதி தரப்பு வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், மேற்படி தாவா விசாரணைக்காக மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை தற்சமயம் படித்துப் பார்த்த போது தான் வாதி தாவா சொத்து குறித்து

விளம்புகை பரிகாரம் கோராமல் உள்ளது பற்றி மனுதாரரின் கட்சியை எதிர்வழக்குரையில் கூறாமல் தவறுதலாக விடுபட்டு போய்விட்டது தெரியவந்ததாகவும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், மனுதாரர் மேற்படி சங்கதி பொறுத்து கூடுதல் எதிர்வழக்குரை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, தாவாவில் மனுதாரர் உரிய காலத்தில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததை மன்னித்து கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம்.</u>

மனுதாரர் பொய்யான சங்கதிகளை கூறி இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் தரப்பில் தாவா அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் கடந்த 15.6.2023 ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னர் கடந்த 01.07.2023 ம் தேதி தாவா எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கில் எழுவினா வனையப்பட்ட பின்னர் உபய தரப்பினர்கள் தரப்பில் வழக்கு சம்பந்தமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பற்றிய விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு என்று வாய்தா ஏற்பட்ட பின்னர் எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 4.10.2023 ம் தேதியன்று வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி என்று கடந்த 4.10.2023 ம் தேதி வாய்தா ஏற்பட்டு வா.சா.1 ன் முதல் விசாரணை முடிவுற்ற நிலையில், மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 3.11.2023 தேதி வாய்தா ஏற்பட்டதாகவும், மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் இந்த அசல் வழக்கின் போக்கை திசை திருப்பி வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்துடனும், கெட்ட எண்ணத்துடனும் இம்மனு 3/2023 ஐ தாக்கல் செய்துள்ளதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சங்கதிகள் மனுதாரர்களுக்கு தெரியாது என்பது

ஒப்புக்கொள்வதாகவும், வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்ன வாதுரைகள் வைக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம் தெரியாமல் மனுதாரர்கள் வழக்கை நடத்தி வருகின்றனரா என்பது போன்ற ஐயப்பாடுகள் எழுவதாகவும், மனுதாரர்கள் தனது தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்கரையில் உபய தரப்பினர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும், எனவே, பாகப்பிரிவினை பரிகாரம் தான் கோர வேண்டுமே தவிர நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்று கூறி விட்டு தற்போது பாகப்பிரிவினை உபயதரப்பினர்களின் பெற்றோர்கள் உயிருடன் இருந்த காலத்திலேயே ஏற்பட்டு, அதன்படி வாதி, 1, 3 பிரதிவாதிகள் அனுபவித்து வருவதால் எதிர்மனுதாரர் தாவா வழக்கை பொறுத்து தாவா சொத்து எதிர்மனுதாரருக்கு மட்டும் பாத்தியம் ஏற்பட்டு அவருடைய தனித்த அனுபவத்தில் இருப்பதை மனுதாரர்கள் ஒப்புக்கொண்டு எதிர்மனுதாரர் தாவா வழக்கு சொத்தை பொறுத்து அவருடைய அனுபவத்தை ஊர்ஜிதம் செய்யும் வகையில் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டுமென்ற கருத்தை தெளிவுப்படுத்தி இந்த மனுவில் கூறுகின்றனர் என்றும், இதிலிருந்து தாவா சொத்து எதிர்மனுதாரரின் தனித்த சொத்து என்பதை இ.ம.எண்.3/23ன் மூலம் மனுதாரர்கள் ஒப்புக்கொள்வதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில், தாவா சொத்து எதிர்மனுதாரரின் அனுபவத்திலும், ஆளுகையிலும் இருப்பதாலும், தாவா சொத்தை பொறுத்து தனியாக விளம்புகை பரிகாரம் கோர வேண்டிய அவசியமில்லை என்றும், தாவா சொத்தை பொறுத்து எதிர்மனுதாரர் யாருடைய இன்னலும், இடையூறுமின்றி அனுபவித்து வந்த நிலையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரரின் அனுபவத்தை கடந்த 2022ம் வருடம் செப்டம்பர் மாதம் இன்னல்கள், இடையூறுகள் செய்ததால் மேற்படியார்களுக்கு எதிராக அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்று அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி தரப்பில் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கை பத்தி 8 பக்கம் 8 ல் "உண்மையில் தாவா சொத்தைப்பொறுத்து பாகப்பிரிவினை செய்யவில்லை என்றால் பிரதிவாதிகள் தாவா வழக்கிலேயே பாகப்பிரிவினை கோரி எதிர்கோருரிமையுடன் கூடிய எதிர்வழக்குரை தாக்கல் செய்திருப்பார்கள். மேற்படி பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எதிர்கோருரிமை பரிகாரம் கோரி நீதிமன்ற கட்டணம் செலுத்தி

பாகப்பிரிவினை பரிகாரம் கோராததிலிருந்தே தாவா சொத்தைப் பொறுத்து உபயவாதிகளின் முன்னோர்கள் காலத்திலேயே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் கூட எதிரிடை பரிகாரம் கோராமல் , நீதிமன்ற கட்டணம் செலுத்தாததிலிருந்தே கூடுதல் எதிர்வழக்குரையானது இவ்வழக்கிற்கு தேவையற்ற ஒன்று என்றும், இம்மனுவானது தாவா வழக்கு விசாரணையை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், மனுதாரர் கோருகிறபடி இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

5.**மனுதாரர் தரப்பு வாதம் யாதெனில்,** இம்மனு மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், வாதிகள் தாவா சொத்து குறித்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக அசல் வழக்கானது வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், மேற்படி குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு, எதிர்வழக்குரையை படித்து பார்த்த போது தான் வாதி தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் உள்ளது பற்றி எதிர்வழக்குரையில் கூறாமல் தவறுதலாக விடுபட்ட விவரம் தெரியவந்ததாகவும், ஆகவே கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், ஆகவே, மேற்படி மனுவை அனுமதிக்குமாறு வாதிடப்பட்டது.

6.**எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் யாதெனில்,** வாதி வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார், என்ன வாதுரைக்கள் வைக்கப்பட்டுள்ளது என்பது குறித்து தெரியாமலேயே வழக்கு நடத்தி வருவதாகவும், பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் பாகப்பிரிவினை கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்று கூறிவிட்டு தற்போது, வாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்படும் பொருண்மையை ஒப்புக்கொண்டு, தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை ஊர்ஜிதம்

செய்யும் வகையில் விளம்புகை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்திருக்க வேண்டும் என்ற கருத்தை தெளிவுப்படுத்தி இம்மனுவில் கூறுவதாகவும், பிரதிவாதிகள் தரப்பில் பாகப்பிரிவினை குறித்த எதிரிடை பரிகாரம் எதுவும் கோராமல், நீதிமன்ற கட்டணம் எதுவும் செலுத்தாமல் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு விசாரணையை காலம் தாழ்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், கூடுதல் எதிர்வழக்குரையானது இவ்வழக்கிற்கு தேவையற்ற ஒன்று என்றும், ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிடப்பட்டது.

வழக்கு கோப்பினை பரிசீலனை செய்யும் போது, வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார். மேலும், வாதியானவர் 04.10.2023 தேதியில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 14 வரையிலான சான்றாணங்களானது குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இம்மனுவை விளம்புகை பரிகாரம் கோராமல் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்று எடுத்துரைக்கும் பொருட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் உள்ளதால் இம்மனுவை அனுமதித்து கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ளுமாறு இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டது. மனுதாரர் இம்மனுவுடன் கூடுதல் எதிர்வழக்குரையையும் இணைத்து தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதற்கு எதிர்மனுதாரர் தரப்பில் எதிரிடை பரிகாரம் குறித்த பாகப்பிரிவினை குறித்த பொருண்மையை தவிர எவ்வித பொருண்மையும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் பதிலுரையில் தாக்கல் செய்யப்பட்ட இதர பொருண்மைகள் குறித்து இம்மனுவில் தீர்வு காண இயலாது. எதிர்மனுதாரர்கள் தங்களது பதிலுரையில் எதிரிடை பரிகாரம் கோராமல் , நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகத்தான் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்களே தவிர கூடுதல் எதிர்வழக்குரையானது பதிவு செய்யப்படும் பட்சத்தில் அதில் கண்டுள்ள பொருண்மைகளானது இவ்வழக்கின் தன்மையை பாதிப்பதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்பது குறித்து எவ்வித பெருண்மையும் எடுத்துரைக்கப்படவில்லை. இம்மனுவானது அனுமதிக்கப்படும்பட்சத்தில், தாவா வாதிக்கு எவ்வித இழப்பும் இல்லை. இவ்வழக்கில் விசாரணையானது

தொடங்கப்பட்டிருப்பினும், தரப்பினர்களுக்கிடையான பிரச்சனை இறுதியாக தீர்வு காணும் பொருட்டும், பிரிதொரு வழக்கு நடவடிக்கையை தவிர்க்கும் பொருட்டும், இவ்வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்க வேண்டியது அவசியமாகிறது.

**முடிவாக,**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் மீண்டும் பிழை திருத்தங்கள் செய்யப்பட்டு இன்று 2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

M PRAVEENA

Digitally signed by M PRAVEENA
Date: 2024.02.01 16:14:03 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியில் நீதிபதி,
நாமக்கல்.

<u>உபயமனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.</u>

M PRAVEENA

Digitally signed by M PRAVEENA
Date: 2024.02.01 16:14:11 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியில் நீதிபதி,
நாமக்கல்.